T.C - 102

**004/DD/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS – PAPER – I (AUDIT OF LOCAL BODIES/UNIVERSITIES AND OTHER AUDITABLE INSTITUTIONS)

(Without Books)

Maximum Time : 1.30 hours

Maximum Marks : 60

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 60 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 60 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. As per the TamilNadu Panchayats Act 1994, the appointing authority for the post of Village Panchayat Secretary shall be

(A) The Collector

(B) Assistant Director (Panchayats)

(C) The Block Development Officer (Village Panchayats)

(D) Personal Assistant (Development to the Collector)

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ன் படி ஊராட்சி செயலரை நியமிக்கும் அதிகாரம் உள்ளவர்?

(A) மாவட்ட ஆட்சியர்

(B) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)

(D) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)

2. Section 193 and 242 of TamilNadu Panchayat Act 1994 deals with

(A) The appointment of Auditors for Rural Local Bodies

(B) Vesting of Communal Property or Income in Village Panchayat

(C) Lighting of Public roads & Public Places

(D) Vesting of Public Roads to Village Panchayats (other than N.H or State Highways)

தமிழ்நாடு ஊராட்சி சட்டம் 1994, பிரிவுகள் 193 மற்றும் 242 ஆனது

(A) உள்ளாட்சி அமைப்புகளுக்கான தணிக்கையாளர்களை நியமிப்பது குறித்தானது

(B) கிராம ஊராட்சியில் சமுதாய சொத்து அல்லது வருமானம் ஒப்படைத்தல்

(C) பொது சாலைகள் மற்றும் பொது இடங்களில் ஒளி விளக்குகள் அமைத்தல் குறித்தானது

(D) கிராம ஊராட்சிக்கு (மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் தவிர) பொது சாலைகளை ஒப்படைத்தல் குறித்தானது

3. As per GO.No. 114/R.D& P.Raj (CGS-1) Dept.02.07.2007, how many litres of Diesel shall be admitted for two jeeps

(A) 50 Ltrs/ Month (B) 60 Ltrs/Month

(C) 40 Ltrs/Month (D) 55 Ltrs/Month

அரசு ஆணை எண். 114/ஊ.வ மற்றும் ப.ராஜ் (சிஜிஎஸ்-1) நாள் 02.07.2007ன் படி இரண்டு ஜீப்புகளுக்கு எத்தனை லிட்டர் டீசல் அனுமதிக்கப்பட்டுள்ளது?

(A) 50 லிட்டர்/மாதம் (B) 60 லிட்டர்/மாதம்

(C) 40 லிட்டர்/மாதம் (D) 55 லிட்டர்/மாதம்

4. Percentage of expenditure shared by Central Govt. & State Govt. under MNREGS Act are?

(A) 50/50 (B) 70/30

(C) 90/10 (D) 80/20

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான செலவினத் தொகை மத்திய மாநில அரசுகள் எவ்வளவு வீதத்தில் பகிர்ந்து கொள்ளும்?

(A) 50/50 (B) 70/30

(C) 90/10 (D) 80/20

5. As per GO.No.10/R.D & P.Raj (CGS-1) Dept.01.02.2006, woman worker working under MNREGA scheme, if dies while working due to fall of trees her husband shall be allowed the following amount?

(A) Rs. 1,00,000 (B) Rs. 50,000

(C) Rs. 25,000 (D) Rs. 75,000

அ.ஆ. எண். 10/ஊ.வ. மற்றும் பஞ்சாயத்து ராஜ் (CGS-1) துறை நாள். 01.02.2006-ன் படி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் பணி செய்யும் பொழுது மரம் விழுந்து இறந்து போன பெண் ஊழியரின் கணவருக்கு வழங்க அனுமதிக்கப்பட்ட தொகை?

(A) ரூ. 1,00,000 (B) ரூ. 50,000

(C) ரூ. 25,000 (D) ரூ. 75,000

6. As per Go.Ms.No.350 Higher Education (H1) Dept. Dt.09.09.2009, the pay of the Directly recruited Professors at the Universities shall be fixed at

(A) Rs. 42,000 + 10,000 GP

(B) Rs. 43000 + 10,000 GP

(C) Rs. 44,000 + 10,000 GP

(D) Rs. 45000 + 10,000 GP

அ.ஆ.நிலை எண். 350 உயர்கல்வி (எச்.1) துறை நாள். 09.09.2009ன் படி பல்கலைக்கழகத்தில் நேரடியாக நியமனம் செய்யப்படும் பேராசிரியருக்கு நிர்ணயம் செய்யப்படும் ஊதியம்?

(A) ரூ. 42,000 + 10,000 த.ஊ.

(B) ரூ. 43000 + 10,000 த.ஊ.

(C) ரூ. 44,000 + 10,000 த.ஊ.

(D) ரூ. 45000 + 10,000 த.ஊ.

7. Audit Fees of the Universities shall be fixed based on the following

(A) 20% of Total Expenditure

(B) Average Cost

(C) Free of Cost

(D) Actual Cost

பல்கலைக்கழகங்களில் தணிக்கைக் கட்டணம் கீழ்க்கண்ட முறையில் நிர்ணயிக்கப்படுகிறது

(A) மொத்த செலவினத்தில் 20 சதவீதம்

(B) சராசரிக் கட்டணம்

(C) கட்டணமில்லை

(D) பெற்றளிக்கப்பட்ட ஊதியம் மற்றும் படிகள்

8. As per Go.Ms.No.983 Home (Transport-IV) Dept. Dt.03.08.2004, the ceiling limit on Expenditure fixed for Heavy Vehicle (Diesel) after Ten years is

(A) Rs. 9,000 (B) Rs. 10,000

(C) Rs. 12,000 (D) Rs. 18,000

அ.ஆ.நிலை எண். 983 உள்(போக்குவரத்து -IV) துறை நாள். 03.08.2004ன் படி, பத்தாண்டுகள் நிறைவுபெற்ற ஒரு கனரக (டீசல்) வாகனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவின உச்சவரம்பு?

(A) ரூ. 9,000 (B) ரூ. 10,000

(C) ரூ. 12,000 (D) ரூ. 18,000

9. State when the Advance will become time barred in a Municipality

(A) 4 years from the date of Payment

(B) 6 years from the date of Payment

(C) 5 years from the date of Payment

(D) 7 years from the date of Payment

ஒரு நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட முன்பணம் காலாவதியாகும் கால இடைவெளி?

(A) முன்பணம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 4 ஆண்டுகள்

(B) முன்பணம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள்

(C) முன்பணம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 5 ஆண்டுகள்

(D) முன்பணம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 7 ஆண்டுகள்

10. Audit Fees of Local Library Authorities other than chennai city

(A) Actual Cost of Audit

(B) Free of Cost

(C) Average Cost

(D) 25% of Standard Cost of Audit

சென்னையை தவிர இதர நூலக ஆணைக்குழு தணிக்கை கட்டணம்?

(A) பெற்றளிக்கப்பட்ட ஊதியம் + படிகள்

(B) கட்டணமில்லை

(C) சராசரிக் கட்டணம்

(D) தரப்படுத்தப்பட்ட செலவினத்தில் 25%

11. As per Section 7 of Local Fund Audit Act 2014 the penalty for delay in submission of accounts exceeding 30 days

(A) Rs. 1,000 (B) Rs. 2,000

(C) Rs. 3,000 (D) Rs. 5,000

உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014, பிரிவு 7ன் படி ஆண்டுக்கணக்குகளை சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேதிக்கு பின்னர் 30 நாட்களுக்கு மேல் கணக்கினை சமர்ப்பித்தால் விதிக்கப்பட வேண்டிய அபராதம்

(A) ரூ. 1,000 (B) ரூ. 2,000

(C) ரூ. 3,000 (D) ரூ. 5,000

12. As per Local Fund Audit Act 2014, the amendments to the audit report should be issued with in ———————— from the date of approval of audit report

(A) 1 year (B) 3 Months

(C) 6 Months (D) 5 Months

உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014ன் படி ஒரு தணிக்கை அறிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து எத்தனை மாதங்களுக்குள் தணிக்கை அறிக்கையில் திருத்தங்கள் வெளியிடப்பட வேண்டும்?

(A) 1 வருடம் (B) 3 மாதங்கள்

(C) 6 மாதங்கள் (D) 5 மாதங்கள்

13. Due Date of submission of University Account for the year 2016-17 is

(A) 30.06.2017 (B) 31.05.2017

(C) 30.04.2017 (D) 31.07.2017

ஒரு பல்கலைக்கழகத்தின் 2016–17 ஆம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்குகள் தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டிய தேதி?

(A) 30.06.2017 (B) 31.05.2017

(C) 30.04.2017 (D) 31.07.2017

14. If the Date of Assetisation falls April — September period of the current year then Percentage of Depreciation shall be

(A) Full % Depreciation

(B) 50% Depreciation

(C) 25% Depreciation

(D) Nil

சொத்தாக்கம் செய்யப்படும் நாளானது நடப்பு ஆண்டில் ஏப்ரல்-செப்டம்பர் கால இடைவெளியில் அமைந்தால் தேய்மான சதவீதம்?

(A) 100% தேய்மானம்

(B) 50% தேய்மானம்

(C) 25% தேய்மானம்

(D) தேய்மானம் இல்லை

15. As per GO.Ms.No.104 MAWS Dt.26.06.2007 Town Panchayat Council Members and President shall be paid sitting fees of

(A) Rs. 300/Month (B) Rs. 400/Month

(C) Rs. 500/Month (D) Rs. 1,000/Month

அரசு ஆணை நிலை எண். 104 ந.நி.ம. கு.வ துறை நாள். 26.06.2007ன் படி பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள கூட்டத்திற்கான இருக்கைப்படி

(A) ரூ. 300/மாதம் (B) ரூ. 400/மாதம்

(C) ரூ. 500/மாதம் (D) ரூ. 1,000/மாதம்

16. As per Section 118 of TNDM act 1920, the authority who is competent to write off time barred arrears of taxes & fees is

(A) The Inspector (B) The Council

(C) BDO (D) The Executive Officer

தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 118ன் படி காலம் கடந்த வரிகள் மற்றும் கட்டணங்களை தள்ளுபடி செய்யும் அதிகாரம் படைத்தவர்?

(A) ஆய்வாளர் (B) மன்றம்

(C) வட்டார வளர்ச்சி அலுவலர் (D) நிர்வாக அலுவலர்

17. The Percentage of recovery for the loss in respect of works audit objections for clerk in the absence of Head Clerk is

(A) 20% (B) 40%

(C) 15% (D) 30%

வேலைகள் சார்ந்த தணிக்கைத் தடை இழப்பீட்டிற்கு தலைமை எழுத்தர் இல்லாத தருணங்களில் எழுத்தரிடமிருந்து பிடித்தம் செய்ய வேண்டிய சதவீதம்?

(A) 20% (B) 40%

(C) 15% (D) 30%

18. Authority to Acord Administrative sanction for works with a estimate of Rs.3 Crores in Grade II Town Panchayat.

(A) Council

(B) Asst. Director (Town Panchayat)

(C) District Collector

(D) Director of Town Panchayat

இரண்டாம் நிலை பேரூராட்சியில் ரூ. 3 கோடி மதிப்புள்ள வேலைகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கும் அதிகாரமுடையவர்?

(A) மன்றம்

(B) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்

(C) மாவட்ட ஆட்சியர்

(D) பேரூராட்சிகளின் இயக்குநர்

19. As per Go.Ms.No.22 / Rural Development & Panchayat (E5) Dept.14.02.2011, A Village Assistant on his retirement will be paid Lumpsum amount, Special Pay & Medical Allowance as given below.

(A) Rs. 50,000, Rs. 700, Rs. 100

(B) Rs. 1,00,000, Rs. 1,000, Rs. 100

(C) Rs. 50,000, Rs. 1,000, Rs. 100

(D) Rs. 50,000, Rs. 1,000, Rs. 300

அரசாணை எண். 22/ஊ.வ./ஊராட்சி நாள். 14.02.2011ன் படி ஊராட்சி உதவியாளர் பணி ஓய்வு பெறும் பொழுது கீழ்க்காணும் அளவில் ஒட்டுமொத்த தொகை, சிறப்பு ஊதியம் மற்றும் மருத்துவபடியினை பெறுவார்

(A) ரூ. 50,000, ரூ. 700, ரூ. 100

(B) ரூ. 1,00,000, ரூ. 1,000, ரூ. 100

(C) ரூ. 50,000, ரூ. 1,000, ரூ. 100

(D) ரூ. 50,000, ரூ. 1,000, ரூ. 300

20. Name of the Village Assistant has been Redesignated as

(A) Executive Officer

(B) Village Panchayat Secretary

(C) Secretory

(D) Village Clerk

ஊராட்சி உதவியாளரின் பதவி பெயர் கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டது

(A) நிர்வாக அலுவலர்

(B) கிராம ஊராட்சி செயலர்

(C) செயலர்

(D) ஊராட்சி எழுத்தர்

21. If the Cement has been bought and kept idle for two years then the loss percentage would be?

(A) 50%

(B) 40%

(C) 20%

(D) 30%

சிமெண்ட் கொள்முதல் செய்யப்பட்டு நீண்டகாலமாக இருப்பு வைக்கப்பட்டால் 2 வருடங்களுக்குப்பின் கீழ்க்கண்ட சதவீதத்தில் திறன் இருக்கும்?

(A) 50%

(B) 40%

(C) 20%

(D) 30%

22. A Deputy Director, Local Fund Audit can write off the Audit objections (which cannot be collected) upto

(A) Rs. 1,500 (B) Rs. 1,200

(C) Rs.750 (D) Rs. 1,000

வசூலிக்க இயலாத தணிக்கைத் தடை இழப்புத் தொகையினை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை துணை இயக்குநரால் தள்ளுபடி செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பு?

(A) ரூ. 1,500 (B) ரூ. 1,200

(C) ரூ. 750 (D) ரூ. 1,000

23. Tax collected as per TamilNadu District Municipality Act 1920 Section 93

(A) Property Tax (B) Local Cess

(C) Entertainment Tax (D) Profession tax

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 93ன் படி கீழ்க்கண்ட தலைப்பிற்கான வரவினம் உள்ளது

(A) சொத்து வரி (B) தல வரி

(C) கேளிக்கை வரி (D) தொழில் வரி

24. As per Go.Ms.No.117 MAWS (Ele.) Dept. Dt.25.06.2008, Tax & Fees to a Municipality becomes time barred after the expiry of

(A) 6 Years (B) 12 Years

(C) 3 Years (D) 1 Year

அரசாணை நிலை எண். 117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 25.06.2008ன் படி நகராட்சிகளில் வரியினங்களும் கட்டணங்களும் எத்தனை நாட்களில் காலம் கடந்தவையாகின்றது

(A) 6 வருடம் (B) 12 வருடம்

(C) 3 வருடம் (D) 1 வருடம்

25. As per sub rule (1) If the Audit Fees to be paid to the Government was not paid even after ________________ years then it can be deducted from Grant eligibility

(A) 2 Years (B) 3 Years

(C) 4 Years (D) 1 Year

அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய தணிக்கைக் கட்டணங்களை உப விதி (1)ன் படி செலுத்தப்படாத நிறுவனங்களின் மான்யங்களிலிருந்து எத்தனை ஆண்டுக்குள் பிடித்தம் செய்யலாம்?

(A) 2 ஆண்டுக்குள் (B) 3 ஆண்டுக்குள்

(C) 4 ஆண்டுக்குள் (D) 1 ஆண்டுக்குள்

26. As per Income Tax Act 196, Section 192, Income Tax exemption allowed to the University / Local body employees on their encashment of earned leave is up to

(A) Rs. 5 Lakhs
(B) Rs. 3 Lakhs
(C) Rs. 2 Lakhs
(D) Full Amount

இந்திய வருமானவரிச்சட்டம் 1961, பிரிவு 192ன் கீழ் உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது அவர்களுக்கு அளிக்கப்படும் ஈட்டிய விடுப்பு காசாக்குதலுக்கான தொகைக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பு

(A) ரூ. 5 லட்சம் வரை
(B) ரூ. 3 லட்சம் வரை
(C) ரூ. 2 லட்சம் வரை
(D) தொகை முழுவதற்கும்

27. As per Go.Ms.No.350 Higher Education (H1) Dept.09.09.2009, The Pay of the Vice Chancellor of a University is fixed at Rs.75,000/- and the Special Allowance allowed is

(A) Rs. 5,000 (DA allowed)
(B) Rs. 10,000 (DA allowed)
(C) Rs. 10,000 (No DA allowed)
(D) Rs. 5,000 (No DA allowed)

அரசாணை நிலை எண். 350 உயர்கல்வித் (எச். 1) துறை நாள். 09.09.2009ன் படி ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதியம் ரூ. 75,000 மற்றும் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்புப்படி?

(A) ரூ. 5,000 (அகவிலைப்படி உண்டு)
(B) ரூ. 10,000 (அகவிலைப்படி உண்டு)
(C) ரூ. 10,000 (அகவிலைப்படி இல்லை)
(D) ரூ. 5,000 (அகவிலைப்படி இல்லை)

28. Choose the wrong one Rate of Depreciation

(A) Building - 5%
(B) Land - 10%
(C) Bridges & Flyovers - 7%
(D) Drainage & culvert - 18%

கீழ்க்கண்டவற்றுள் தேய்மான கணக்கீட்டில் தவறான ஒன்றைக் குறிப்பிடுக.

(A) கட்டிடங்கள் - 5%
(B) நிலம் - 10%
(C) பாலங்கள் - 7%
(D) வடிகால் மற்றும் சிறுபாலம் - 18%

29. For a building of Height upto 3 Metre, Base concrete should be

(A) 0.15 M (B) 0.20 M

(C) 0.25 M (D) 0.3 M

3 மீட்டர் உயரமுள்ள கட்டிடங்களுக்கு எவ்வளவு அடித்தளம் இருக்க வேண்டும்?

(A) 0.15 மீ (B) 0.20 மீ

(C) 0.25 மீ (D) 0.3 மீ

30. 1 Cubic Metre Cement is

(A) 1,440 Kg (B) 1,330Kg

(C) 1,000 Kg (D) 1,220 Kg

1 கன மீட்டர் சிமெண்ட் என்பது

(A) 1440 கிலோ (B) 1330 கிலோ

(C) 1,000 கிலோ (D) 1,220 கிலோ

31. As per Go.Ms.No.45 MAWS Dept. Dt. 06.06.2003 who can levy and collect Advertisement tax in Local bodies?

(A) District Collector (B) BDO

(C) RDO (D) AD (Town Panchayat)

அரசாணை நிலை எண். 45 ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 06.06.2003ன் படி உள்ளாட்சி நிறுவனங்களில் விளம்பர வரி விதிக்க மற்றும் வசூலிக்கும் அதிகாரம் படைத்தவர்?

(A) மாவட்ட ஆட்சியர் (B) வட்டார வளர்ச்சி அலுவலர்

(C) ஊரக வளர்ச்சி அலுவலர் (D) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்

32. The Percentage of the Advertisement tax collected to be remitted to Government Account & Local Body

(A) 75% to Government & 25% to Local Body

(B) 80% to Government & 20% to Local Body

(C) 60% to Government & 40% to Local Body

(D) 50% to Government & 50% to Local Body

வசூலிக்கப்பட்ட விளம்பர வரியில் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கு செலுத்தப்பட வேண்டிய சதவீதம்?

(A) அரசுக்கு 75% மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கு 25%

(B) அரசுக்கு 80% மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கு 20%

(C) அரசுக்கு 60% மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கு 40%

(D) அரசுக்கு 50% மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கு 50%

33. In a Town Panchayat, the Revenue Refund can be made ———————— from the Date of Lapse

(A) within 3 years (B) within 6 years

(C) within 4 years (D) within 5 years

ஒரு பேரூராட்சியில் காலம் கடந்த வரவினத்தை எத்தனை வருடங்களுக்குள் திரும்ப வழங்கலாம்?

(A) 3 வருடங்களுக்குள் (B) 6 வருடங்களுக்குள்

(C) 4 வருடங்களுக்குள் (D) 5 வருடங்களுக்குள்

34. When a Municipal Servent is Medically Invalidated before attaining the age of fifty his spouse may be appointed on compassionate ground. The Maximum age limit is

(A) 55 years (B) 40 years

(C) 50 years (D) 35 years

ஒரு நகராட்சி ஊழியர் 50 வயது முடிவதற்குள் மருத்துவரீதியாக உடல் தகுதி இழக்கும் போது (Medical Invalidation) அவரது மனைவிக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம். அவருடைய மனைவியின் வயது வரம்பு என்ன? எவ்வளவு வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்?

(A) 55 ஆண்டுகள் (B) 40 ஆண்டுகள்

(C) 50 ஆண்டுகள் (D) 35 ஆண்டுகள்

35. Whose sanction is necessary for diversion of earmarked funds in a Municipality

(A) Collector (B) Municipal Commissioner

(C) Government (D) Council

ஒரு நகராட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை மற்றொரு நிதிக்கு மாற்ற யாருடைய அனுமதி தேவை?

(A) மாவட்ட ஆட்சியர் (B) நகராட்சி ஆணையர்

(C) அரசு அனுமதி (D) மன்ற அனுமதி

36. Financial performance of the Institution is verified by

(A) Balance Sheet (B) Income & Expenditure Statement

(C) Trial Balance (D) Profit & Loss Account

ஒரு நிறுவனத்தின் நிதி நிர்வாக செயல்பாட்டினை உறுதியிட சரிபார்க்கப்பட வேண்டியது

(A) இருப்பு நிலை அறிக்கை (B) வருவாய் மற்றும் செலவு கணக்கு

(C) ஐந்தொகை கணக்கு (D) லாப நஷ்ட கணக்கு

37. Interest due on the Investments for the year should be Calculated and booked in code Nos.

(A) 1067 & 3025 (B) 1071 & 3047

(C) 1068 & 3045 (D) 1071 & 3028

ஓர் ஆண்டுக்கான முதலீடுகள் மீதான வட்டியை கணக்கிடப்பட்டு கீழ்க்கண்ட குறியீடுகளில் குறிப்பிட வேண்டும்

(A) 1067 மற்றும் 3025 (B) 1071 மற்றும் 3047

(C) 1068 மற்றும் 3045 (D) 1071 மற்றும் 3028

38. The Code No.2022 Denotes

(A) Audit Fees

(B) Prior year Expenses

(C) Provison for Doubtful Collection

(D) Stock Account

குறியீடு எண். 2022 இதைக் குறிக்கிறது

(A) தணிக்கைக் கட்டணம்

(B) முந்தைய ஆண்டிற்கான செலவினம்

(C) ஐயப்பாடுள்ள வரவினங்களுக்கான ஒதுக்கீடு

(D) இருப்புக் கணக்கு

39. As per GO Ms No.15 RD & P(E5) Dept. Dt.03.02.2011, operator of the tank (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி) shall be paid Monthly Consolidated pay of?

(A) Rs.1,000 (B) Rs. 3,000

(C) Rs. 4,000 (D) Rs. 2,000

அரசாணை நிலை எண். 15 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை நாள். 03.02.2011ன் படி கிராம ஊராட்சிகளில் பணியாற்றி வரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவரது மாதாந்திர தொகுப்பூதியம்?

(A) ரூ. 1,000 (B) ரூ. 3,000

(C) ரூ. 4,000 (D) ரூ. 2,000

40. As per Go.Ms.No.38 MAWS Dept. Dt.30.01.2008 A Regional Executive Engineer shall accord Technical sanction upto

(A) Rs. 75 Lakhs (B) Rs. 50 Lakhs

(C) Rs. 40 Lakhs (D) Rs. 20 Lakhs

அரசு ஆணை எண். 38 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை நாள். 30.01.2008ன் படி மண்டல செயற்பொறியாளர் —————— வரை உள்ள வேலைகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கலாம்

(A) 75 இலட்சம் வரை (B) 50 இலட்சம் வரை

(C) 40 இலட்சம் வரை (D) 25 இலட்சம் வரை

41. As per Go.Ms.No.461 Finance (Allowance) Dept. Dt.22.09.2009, Provident Fund Monthly subscription shall be deducted in the percentage noted below from BP, GP, Spl.Pay, PP & DA.

(A) 10% (B) 12%

(C) 8% (D) 15%

அரசு ஆணை எண். 461 நிதி (படிகள்) துறை நாள். 22.09.2009ன் படி 01.09.2009 முதல் சேமநலநிதி மாதச்சந்தா அடிப்படை ஊதியம், தர ஊதியம், தனி ஊதியம், சிறப்பு ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றை சேர்த்து —————— மாதச்சந்தா பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(A) 10 சதவிகிதம் (B) 12 சதவிகிதம்

(C) 8 சதவிகிதம் (D) 15 சதவிகிதம்

42. As per Go.Ms.No 103 Finance (Allowances) Dept. Dt.01.04.2013 and Provident Fund Rule 15(F) House Building Advance shall be allowed upto?

(A) Rs. 50,00,000 (B) Rs.10,00,000

(C) Rs. 20,00,000 (D) Rs. 25,00,000

அரசு ஆணை எண். 103 நிதி(படிகள்) துறை நாள். 01.04.2013ன் படி சேமநல விதி 15(F) ன் படி அனுமதிக்கப்படும் வீடுகட்டும் முன்பணம்?

(A) ரூ. 50,00,000 (B) ரூ. 10,00,000

(C) ரூ. 20,00,000 (D) ரூ. 25,00,000

43. Code No. 4013 denotes

(A) Advance Collection (B) Provision for Doubtful Collection

(C) Contribution from Government (D) Audit Fees Payable

குறியீடு எண். 4013 இதைக் குறிக்கும்

(A) முன்வசூல் (B) ஐயப்பாடுள்ள வரவினங்களுக்கான ஒதுக்கீடு

(C) அரசின் பங்களிப்பு (D) தணிக்கைக்கட்டணம் செலுத்த வேண்டியது

44. As per Go.No.165 MAWS Dept. Dt.11.04.2008 Municipal Administration Regional Director shall give permission for extraordinary expense of Municipality upto

(A) Rs. 6,000 (B) Rs. 10,000

(C) Rs. 7,500 (D) Rs. 5,000

அரசு ஆணை எண். 165 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.3) நாள். 11.04.2008ன் படி நகராட்சி ஒன்றின் அசாதாரண செலவுக்கு ரூ —————— வரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அனுமதி வழங்கலாம்

(A) ரூ. 6,000 (B) ரூ. 10,000

(C) ரூ. 7,500 (D) ரூ. 5,000

45. Loan amount to be repaid by the Municipality & other balances of a Municipality shall be verified by the following Codes

(A) 4061 - 4074 (B) 4016 - 4020

(C) 3070 (D) 4002 - 4007

ஒரு நகராட்சியில் திருப்பி தரவேண்டிய கடன் மற்றும் இதரவகை பாக்கித் தொகை எவ்வளவு என்பதை இதன் மூலம் அறியலாம்

(A) 4061 - 4074 (B) 4016 - 4020

(C) 3070 (D) 4002 - 4007

46. As per Go.No.84 Rural Development Dept. Dt.05.05.1998, while purchasing tools & plants for Water Services, the equipments purchased should be for the period of

(A) 2 Months only (B) 3 Months only

(C) 4 Months only (D) 5 Months only

அரசாணை எண். 84 ஊரக வளர்ச்சித்துறை நாள். 05.05.1998ன் படி பேரூராட்சிகளுக்குத் தேவையான குடிநீர் பாகங்கள் ———————— மாதத்திற்குத் தேவையான அளவில் மட்டுமே கொள்முதல் செய்யப்பட வேண்டும்

(A) 2 மாதங்கள் (B) 3 மாதங்கள்

(C) 4 மாதங்கள் (D) 5 மாதங்கள்

47. As per Go.No.223 Rural Development Dept. Dt.19.12.1994, the period to change the street lights Sodium lights for three years (Bulbs)

(A) 2 Nos. (B) 1 No

(C) 3 Nos. (D) 4 Nos.

அரசு ஆணை எண். 223, ஊரக வளர்ச்சித் துறை நாள். 19.12.1994ன் படி தெரு விளக்கு சாதனங்கள் மாற்றுவதற்கான கால இடைவெளி சோடியம் விளக்கு 3 ஆண்டுகளுக்கு (பல்பு)

(A) 2 எண்ணிக்கை (B) 1 எண்ணிக்கை

(C) 3 எண்ணிக்கை (D) 4 எண்ணிக்கை

48. As per TamilNadu Engineering Manual for Urban Local bodies refund of withheld amount of 5% deducted in the Building work shall be made after ———————— reckoned from the date of completion of work.

(A) 5 Months (B) 1 Year

(C) $1\frac{1}{2}$ Year (D) 6 Months

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பொறியாளர் நடைமுறையின் படி ஒரு ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்து வைத்துள்ள 5% தொகையை வேலை நிறைவடைந்த எத்தனை நாட்களுக்குள் திருப்பி வழங்கலாம்?

(A) 5 மாதங்கள் (B) 1 வருடம்

(C) $1\frac{1}{2}$ வருடங்கள் (D) 6 மாதங்கள்

49. Painting can be done

(A) Once in a year (B) Once in 2 years

(C) Once in 6 years (D) Once in 3 years

வண்ணம் பூசுதலுக்கான கால இடைவெளி

(A) ஓராண்டுக்கு ஒரு முறை (B) இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை

(C) ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை (D) மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை

50. In a Town Panchayat Account, Account Code 2040 denotes

(A) Depreciation Account

(B) Provision for Doubtful Collection

(C) Town Panchayat Contribution to Capital Works

(D) Interest on Loan Account

ஒரு பேரூராட்சி கணக்கில், கணக்கு குறியீடு எண். 2040 இதைக் குறிக்கிறது

(A) தேய்மானம் கணக்கு

(B) ஐயப்பாடுள்ள வரவினங்களுக்கான ஒதுக்கீடு

(C) மூலதன வேலைகளுக்கு பேரூராட்சியின் பங்கு

(D) கடனுக்கான வட்டி கணக்கு

51. Limit for transfer of fund from Account No.2 to Account No.1 in Panchayats is

(A) Rs. 2 Lakhs (B) Rs. 5 Lakhs

(C) Rs. 3 Lakhs (D) Rs. 4 Lakhs

ஊராட்சி கணக்கு எண் 2 லிருந்து கணக்க எண் 1க்கு நிதி மாற்றம் செய்யக்கூடிய நிதி வரம்பு?

(A) ரூ. 2 இலட்சம் (B) ரூ. 5 இலட்சம்

(C) ரூ. 3 இலட்சம் (D) ரூ. 4 இலட்சம்

52. How many types of Depreciation methods are there?

(A) 2 methods (B) 3 methods

(C) 1 method (D) 4 methods

எத்தனை தேய்மானக் கணக்கீடு வகைகள் உள்ளன?

(A) 2 வகைகள் (B) 3 வகைகள்

(C) ஒரு வகை (D) 4 வகைகள்

53. As per Go. Ms.No.111 MAWS (NE3(2)) Dept. Dt.13.08.2007, SPF Management Contribution to be paid to a Town Panchayat Clerk is

(A) Rs. 5,000 (B) Rs. 15,000

(C) Rs. 10,000 (D) Rs. 7,500

அரசு ஆணை நிலை எண். 111 ந.நி.(ம)கு.வ (எண்.இ3(2)) துறை நாள். 13.08.2007ன் படி, ஒரு பேரூராட்சி எழுத்தருக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிர்வாகப் பங்குத் தொகை எவ்வளவு?

(A) ரூ. 5,000 (B) ரூ. 15,000

(C) ரூ. 10,000 (D) ரூ. 7,500

54. Closing Stocks as per Priced Stores Ledger should be shown under Code No ———— of the Trial balance

(A) 3001 (B) 3003

(C) 3028 (D) 3043

விலை மதிப்புடன் கூடிய இருப்புப் பொருட்களின் பதிவேட்டின்படி (Priced Stores Ledger) முடிவிருப்பு பொருட்களின் மதிப்பு கணக்கு எண் ———— ல் ஐந்தொகையில் காட்டபட வேண்டும்

(A) 3001 (B) 3003

(C) 3028 (D) 3043

55. In Village Panchayat, House Tax is levied as per ———— of the TamilNadu Panchayat Act 1994

(A) Section 198 (B) Section 170

(C) Section 155 (D) Section 172

ஒரு கிராம ஊராட்சியில் வீட்டுவரி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ————ன்படி விதிக்கப்படுகிறது

(A) பிரிவு 198 (B) பிரிவு 170

(C) பிரிவு 155 (D) பிரிவு 172

56. As per TamilNadu Transparency in Tender Act 2000, Rule 20 For the tenders above Rs. 2 Crores, the gap between the Date of Inviting tender and Opening tender should be

(A) 15 days (B) 30 days

(C) 20 days (D) 45 days

தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை சட்டம் 2000, விதி 20ன்படி ரூ. 2 கோடிக்கு மேல் உள்ள ஒப்பந்தப்புள்ளி வரவேற்பு அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கும், ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாளுக்கும் இடையே இருக்க வேண்டிய இடைவெளி

(A) 15 நாட்கள் (B) 30 நாட்கள்

(C) 20 நாட்கள் (D) 45 நாட்கள்

57. As per Rule 32 of Public Health Act 1939 advance collection of D&O Trade fees should be collected before

(A) February 15 (B) January 15

(C) March 15 (D) January 31

பொது சுகாதாரச் சட்டம் 1939, விதி 32ன் படி ———————— க்கு முன்னர் அபாயகராமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமக்கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்

(A) பிப்ரவரி 15 (B) ஜனவரி 15

(C) மார்ச் 15 (D) ஜனவரி 31

58. As per Go.No.1644 / RD &PA Dt.12.10.79, the retirement Age of the contingent staff who were brought under regular pay is

(A) 50 age (B) 58 age

(C) 60 age (D) 55 age

அரசாணை எண். 1644 / ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகம் நாள். 12.10.79ன் படி முறையான ஊதிய விகிதத்திற்கு கொண்டு வரப்பட்ட சில்லரை செலவினப் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது

(A) 50 வயது (B) 58 வயது

(C) 60 வயது (D) 55 வயது

59. As per Go.No.125/ MAWS Dept. Dt.13.05.1996, the ceiling limit of expenditure for the celebrations of Independence day & Republic day in Corporation is

(A) Rs. 1500 (B) Rs. 1000

(C) Rs. 2500 (D) Rs. 5000

அரசாணை எண். 125 / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை / நாள். 13.05.1996ன் படி மாநகராட்சிகளில் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் கொண்டாடுவதற்குரிய செலவு உச்சவரம்பு என்ன?

(A) Rs. 1500 (B) Rs. 1000

(C) Rs. 2500 (D) Rs. 5000

60. Apportionment of Provident -Fund T. Deposit Interest is taken from the entries of the record given below

(A) Provident Fund Cash Book (B) Provident Fund Advance Register

(C) Provident Fund Abstract Register (D) Provident Fund Ledger

உள்ளாட்சி நிறுவனங்களின் சேமநலநிதி கருவூல இருப்பிற்கு பெறப்படும் வட்டி கீழ்க்காணும் பதிவேடு பதிவுகளின் படி பிரித்தளிக்கப்படுகிறது

(A) சேமநலநிதி ரொக்கப்புத்தகம் (B) சேமநலநிதி முன்பண பதிவேடு

(C) சேமநலநிதி சுருக்கப் பதிவேடு (D) சேமநலநிதி பேரேடு

ROUGH WORK

ROUGH WORK

**004/DD/18**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SUBORDINATE ACCOUNTS SERVICES EXAMINATIONS – PAPER – I (AUDIT OF LOCAL BODIES/UNIVERSITIES AND OTHER AUDITABLE INSTITUTIONS)

(With Books)

Maximum Time : 1 hour

Maximum Marks : 40

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**[Turn over**

**Write the answer any EIGHT of the following questions.**

கீழ்காணும் வினாக்களில் <u>எட்டு</u> வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **(8 × 5 = 40)**

1. Write short notes on:

   (a) Vacancy Remission

   (b) 2c tree tax

   சிறு குறிப்பு எழுதுக.

   (அ) குடியிருக்காத காலத்திற்கான வரி குறைப்பு

   (ஆ) 2 சி மர வரி

2. (a) What are the causes for the minus balance in the Deposit Register?

   (b) What is the procedure to be followed when a contractor has abandoned a work in the middle?

   (அ) வைப்புத் தொகை பதிவேட்டில் பற்றாக்குறை இருப்பு ஏற்பட காரணங்கள் என்ன?

   (ஆ) ஒப்பந்ததாரர் வேலையின் இடையில் கைவிடப்பட்ட வேலையினை பொறுத்து கையாளப்பட வேண்டிய செயல் முறைகள் என்ன?

3. (a) What are the rules governing the refund of Lapsed deposit in the Local bodies?

   (b) What are the percentage of voids and shrinkage from the following items?

   (i) Carted earth

   (ii) Sand (Shrinkage)

   (iii) Random stone (Undressed stone)

   (iv) Blasted rocks

   (v) Jungle clearance

   (அ) உள்ளாட்சி நிறுவனங்களில் காலங்கடந்த வைப்புத் தொகை திருப்பி வழங்குவது தொடர்பாக கடைபிடிக்கப்படும் விதி முறைகள் என்ன?

   (ஆ) கீழ்க்காணும் இனங்களில் வெற்றிட சதவீதம் மற்றும் சுருக்கம் என்ன?

   (i) வண்டி மண்

   (ii) மணல் (சுருக்கம்)

   (iii) கருங்கல் (வடிக்கப்படாத கல்)

   (iv) வெடிவைத்து தகர்க்கப்பட்ட பாறை

   (v) சிறு காடுகள் அழித்தல்

4. What are all the preliminary checks to be exercised before the commencement of audit?

தணிக்கை துவங்குவதற்கு முன் கையாளப்பட வேண்டிய முன் சோதனைகள் எவை?

5. What are all the points to be seen in a Budget?

வரவு செலவு திட்டத்தில் சரிபார்க்கப்பட வேண்டிய அனைத்து குறிப்புகள் என்ன?

6. What are the Registers and Records maintained for property tax in Municipality?

நகராட்சியில் சொத்துவரி தொடர்பாக என்னென்ன பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பராமரிக்கப்படுகின்றன?

7. Define the Scope of audit in respect of

(a) Deposit work

(b) Define "works".

கீழ்க்காணும் இனங்களில் தணிக்கை மேற்கொள்வது குறித்து வரையறு?

(அ) வைப்புத் தொகை பணி

(ஆ) "வேலைகள்" வரையறு.

8. What are the Registers and Records to be seen in audit of Final bills of a Contractor for execution of Road work/Building work?

சாலை வேலை / கட்டிட வேலையில் ஒப்பந்ததாரரின் முடிவு பட்டியலில் தணிக்கையின் போது சரிபார்க்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் எவை?

9. What are the Sources of Revenue to the Panchayat Union Councils?

ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் வருவாய் ஆதாரங்கள் என்ன?

10. Write Short Notes on

(a) Tax on Servants

(b) Timber tax

(c) Pilgirm tax

(d) Dispensary grant.

சிறு குறிப்பு எழுதுக.

(அ) வேலையாள் வரி

(ஆ) மரச்சாமான் வரி

(இ) யாத்திரிகர் வரி

(ஈ) மருந்தக மான்யம்.